# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.115 /பேரு/2023
நாள். 20 .6. 2023

திரு. இரா. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர்,
மதுரை மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வத்தலக்குண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம் .... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மயில்சாமி என்பவரது 18.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.04.2023 அன்று பெறப்பட்டு, 115/பேரு/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மயில்சாமி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வத்தலகுண்டு பேருந்து நிலையம் பின்புறம் காந்தி நகர் மெயின்ரோட்டில் இயங்கிவரும் DMS மருத்துவமனையானது போலியான விளம்பர பெயர் பலகை வைத்து கொண்டு பொது மக்களை ஏமாற்றி வருகிறது. இது ஒரு நர்சிங்ஹோம் என்ற பெயரில் அனுமதி பெறப்பட்டு சட்டத்திற்கு புறம்பாக DMS மருத்துவமனை என்று போலியான பெயரில் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

மேலும் DMS நர்சிங்ஹோம், கட்டிடம் கூடுதலாக கட்டப்பட்டும், நர்சிங்ஹோம் கட்டிடத்தை சுற்றிலும் 13 அடி இடைவெளி அரசு சட்ட விதிகளின்படி விட வேண்டும், ஆனால் இடைவெளி இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. DMS நர்சிங்ஹோம் என்ற பெயரில் அனுமதி பெற்றுக் கொண்டு சட்ட விதிகளுக்கு மாறாக ஆபரேசன் தியேட்டர், பல படுக்கைகள் வைத்து கொண்டு சட்டத்திற்கு முரணாக செயல்பட்டு வருகிறது. DMS நர்சிங்ஹோம் வரும் நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி இல்லை வரும் வாகனங்கள் சாலையில் தான் நிறுத்த வேண்டி உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

DMS மருத்துவமனை, நர்சிங்ஹோம் பொது மக்கள் கூடும் கட்டிடம் என்பதால் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்கத்தால் முறையான அனுமதி பெறவில்லை (Directorate of Town and Country Planning) DMS நர்சிங்ஹோம் பொது மக்கள் கூடும் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) சட்டம் 1965–ன் பிரிவு 2(8)ன்படி (Section 2(8) of the Tamil Nadu Public Building(Licensing) Act 1965–ன்படி) உரிமம் பெறவில்லை. மேலும் DMS நர்சிங்ஹோம் சட்டத்திற்கு புறம்பாக செவிலியர் பயிற்சி மாணவர்கள் தங்கும் விடுதியாகவும் இக்கட்டிடத்தில் தங்கியுள்ளார்கள்.

மேற்படி DMS நர்சிங்ஹோம் கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக (Violation of Building) கட்டிடம் கட்டியும், மருத்துவமனைக்கு சட்டவிதிகளின்படி 13 அடி இடைவெளி விடாமலும், வாகன நிறுவத்துவதற்கு இடம் இல்லாமலும் செவிலியர் பயிற்சி மாணவிகளின் தங்கும் விடுதியாகவும் தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) 1965ன்படி உரிமம் பெறாமலும் நர்சிங்ஹோம் என்ற பெயரில் உரிமம் பெற்று கொண்டு, மருத்துவமனை என்று பெயர் பலகை வைத்தும் பல படுக்கை அறைகள் வைத்தும் ஆபரேசன் தியேட்டர் உள்ளிட்ட தளவாடங்கள் வைத்துக் கொண்டும் சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் DMS மருத்துவமனை கட்டிடத்தை அகற்றியும் (Remove) நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–பிரிவுகள் 56(1) மற்றும் உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85ன் கீழ் Stop work notice/ Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கபட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and seal and demolition notice வழங்கியும் அமலாக்க நடவடிக்கை எடுக்கவும் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு மிக பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள டி.எம்.எஸ். மருத்துவமனை கட்டிடத்திற்கு மதுரை நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் 2329/2013/மம4, நாள் 16.2.2013ன்படி வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி எண் 18/2013ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு உரிய கட்டிடம் கட்ட இப்பேரூராட்சியின் கட்டிட உரிமம் எண் 63/2013–2014, நாள் 08.01.2014ன் மூலம் உத்தேச கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அனுமதிக்கப்பட்ட வரைபடத்தை விட கூடுதலாக கட்டி வருவதை ஆய்வு செய்து உரிய திருத்திய வரைபட அனுமதி பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தால் வழங்கப்பட்ட திருத்திய வரைபடம் உரிய அனுமதி வழங்க வேண்டி சென்னை நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு பேரூராட்சியால் கடிதம் ந.க. எண் 360/2014/அ1, நாள் 23.12.2015ன்படி பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் வரிவிதிப்பு செய்யப்படாமல் உள்ள கட்டிடங்களை கண்டறியப்பட்டு கணக்கீடு செய்து புதியதாக வரிவிதிப்பு செய்யவும், குறைவான தொகை உள்ள வரிவிதிப்புகளை (Un Assesed and Under Assesed) மறு சீராய்வு செய்து பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு இல்லாமல் நடவடிக்கை மேற்கொள்ள சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2068/2016/இ5, நாள் 31.7.2017 மற்றும் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி பேரூராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி முறைபடுத்துதல் கட்டணம் 13 அரையாண்டுகளுக்கு தொகை ரூ.5,57,300/– காசோலை எண் 263157, நாள் 28.03.2018ன்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து 12.01.2023ம்தேதியில் வத்தலக்குண்டு பேரூராட்சியின் செயல் அலுவலராக பொறுப்பேற்ற என்னால் பொது கட்டிட விதிகளின்படி சென்னை நகர் ஊரமைப்புத்துறை மூலமாக அனுமதி பெற்று திருத்திய வரைபட அனுமதிபெற எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத சம்பந்தப்பட்ட டி.எம்.எஸ் மருத்துவமனை நிர்வாகத்திற்கு பொது கட்டிட விதிகளின்படி சென்னை நகர் ஊரமைப்புத்துறை மூலமாக அனுமதி பெற்று திருத்திய வரைபட அனுமதி சமர்ப்பிக்கவும், தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து 24.01.2023ம் தேதியில் சம்பந்தப்பட்ட டி.எம்.எஸ். மருத்துவமனை நிர்வாகத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்வித ஆவணங்களோ முகாந்திரமோ சமர்ப்பிக்கவில்லை.

மேலும் உரிய முகாந்திரம் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்காத சம்பந்தப்பட்ட டி.எம்.எஸ் மருத்துவமனை நிர்வாகத்திற்கு 15.2.2023ல் இரண்டாவது முறை அறிவிப்பு அனுப்பப்பட்டும் எவ்வித ஆவணங்களோ முகாந்திரமோ சமர்ப்பிக்கவில்லை.

இதனால் மேல்நடவடிக்கை தொடருவதற்கு ஏதுவாக நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு எவ்வித ஆவணங்களோ முகாந்திரமோ சமர்ப்பிக்காத மேற்படி மருவத்துமனை நிர்வாகத்தின் மீது சட்டப்படி மேல் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக உரிய சட்ட கருத்துரு வழங்க வேண்டி கடிதம் அனுப்பட்டதில், கீழ்க்காணுமாறு அரசு வழக்கறிஞர் சட்ட கருத்துரு வழங்கியுள்ளார்கள்.

"மருத்துவமனை நிர்வாகத்திற்கு வாய்ப்புகள் கொடுக்கும் உரிய ஆவணங்களையும் திருத்தப்பட்ட வரைபட அனுமதியையும் தாக்கல் செய்ய இறுதி அறிவிப்பு செய்யவும், உரிய காலகெடுவுக்குள் மருத்துவமனை நிர்வாகம் நெறிமுறைகள் பின்பற்றவில்லை என்றால் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளலாம் என சட்டக்கருத்துரு வழங்கியுள்ளார்கள்"

அதன்படி பொது கட்டிட விதிகளின்படி சென்னை நகர் ஊரமைப்புத்துறை அனுமதி பெற்று திருத்திய வரைபட அனுமதி பெற தெரிவித்தும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்து இறுதி அறிவிப்பு 1.3.2023 அன்று அனுப்பப்பட்டும் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

எனவே பொது கட்டிட விதிகளுக்கு புறம்பாக உள்ள மேற்காணும் மருத்துவமனைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு எண்.OSSR No.8224/2023 நாள்: 26.04.2023-ன் படி வழக்கு எதிராக திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

4) இம்முறைமன்ற 11.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 06.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுக்கா, வத்தலக்குண்டு பேருந்து நிலையம் பின்புறம் காந்தி நகர் ரோடு, கதவு எண். 8–2ல், DMS மருத்துவமனை இயங்கி வருகிறது. மேற்கண்ட பகுதி மருத்துவமனை நிர்வாகம் இரண்டு மாடி கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் பெற்றுவிட்டு விதிகளை மீறி நான்கு மாடி கட்டடம் கட்டி மருத்துவமனை நடத்தி வருகின்றனர். கட்டடத்தைச்சுற்றி விதிகளின்படி வாகனம் நிறுத்துவதற்கு வசதியாக இடம் விடாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம்) 1965ன்படி வருவாய் வட்டாட்சியரிடம் உரிமம் பெறவில்லை. எனவே மேற்கண்ட மருத்துவமனையின் மீது 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்புச்சட்டத்தின்படி மூடி முத்திரையிடுதல் உட்பட மேல் நடவடிக்கைகள் எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது கோரிக்கையை போன்ற பிறிதொரு நேர்வில், டாக்டர். சீனிவாச கண்ணன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் விதி மீறி கட்டப்பட்ட மருத்துவமனையினை மூடி முத்திரையிடுதல் தொடர்பான நடவடிக்கை நாகர்கோவில் நகராட்சியினரால் மேற்க்கண்டதை எதிர்த்து தொடரப்பட்ட நீதிப்பேராணை எண். W.P.(MD) 3563 of 2013/08.02.20218–ல் தள்ளுபடி செய்யப்பட்ட ஆணையின் நகலினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்.

6) வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 06.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள DMS மருத்துவமனை கட்டிட விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட கட்டடத்திற்கு மதுரை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து திருத்திய வரைபட அனுமதி பெற்று வத்தலகுண்டு பேரூராட்சியில் சமர்ப்பிக்கும்படி மூன்று முறை அதாவது 24.1.2023, 15.2.2023 மற்றும் 1.3.2023 ஆகிய நாட்களில் கட்டட உரிமையாளருக்கு அறிவிப்புகள் சார்பு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து Lock and Seal அறிவிப்பும், மேலும் De-occupation அறிவிப்பும் விரைவில் பேரூராட்சியால் வழங்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 05.06.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு. R. மயில்சாமி ஏற்கனவே இம்முறை மன்றத்தில் அளித்திருந்த 23.11.2022 நாளிட்ட மனுவில் DMS மருத்துவமனை குறித்து புகார் தெரிவித்ததன் அடிப்படையில் இம்முறைமன்றத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இம்முறைமன்ற ஆணை எண்.241/பேரூ/2022 நாள்:7.2.2023ல் பின்வருமாறு ஆணையிட்டது:-

இந்நேர்வில் மனுதார் குறிப்பிட்டுள்ள வத்தலகுண்டு பேரூராட்சி, காந்திநகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள DMS மருத்துவமனை கட்டடத்திற்கு கட்டட அனுமதி 20.12.2013 அன்று வழங்கப்பட்டது; மேலும் வரைபடத்தை விட கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு உரிய அனுமதி பெறுமாறு 04.01.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. ஆனால் அதன்பிறகு எந்தவிதமான தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளாதது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இது பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்களின் மெத்தனப்போக்கையும், அலட்சிப்போக்கையும் காட்டுகிறது. இதற்கு பொறுப்பான அனைத்து அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் மேற்படி மருத்துவமனைக்கு வரிவிதிப்பு செய்யப்படாமல் உள்ள கட்டடங்களை கண்டறிந்து கணக்கீடு செய்து புதிதாக வரிவிதிப்பு செய்தும், குறைவான தொகை உள்ள வரிவிதிப்புகளை மறு சீராய்வு செய்தும் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு இல்லாமல் உள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்திற்கான கட்டட உரிமம் (Tamil Nadu Public Building (Licensing) Act 1965)ன்படி உரிமையாளரால் கட்டப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்திடுமாறு பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மருத்துவமனை முறைப்படி பெறப்பட்ட கட்டட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்திட பேரூராட்சியின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் நிலையில் ஒருவரை நியமித்து கட்டட அனுமதி வாங்கப்பட்டதற்கும், கட்டப்பட்டுள்ள கட்டடத்தை ஒப்பீடு செய்தும் மேற்கண்ட மருத்துவமனைக்கான வாகனங்கள் நிறுத்துமிடம் (Parking Space) முறையாக விடப்பட்டுள்ளதா என்பது குறித்ததுமான விரிவான அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறும் பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Executive Officers who were in office from 04.01.2018 and colluded with the Hospital Management by not pursuing action after issue of notice should be chargesheeted by the Director of Town Panchyats. Unless this trend of complicity and collusion coupled with prolonged inaction on the part of the Executive Officers is curbed sternly it would lead to still worse consequences in future. This kind of non – accountability, evasion and lack of devotion to duties cannot be tolerated.

A copy of the order is also sent to Government in MAWS for information.

இந்நேர்வில் இப்பொருள் குறித்து ஆணை எண்.241/பே/2022 நாள்:7.2.2023ல் இம்முறைமன்றத்தால் ஆணை வெளியிடப்பட்ட நிலையிலும், தற்போது 18.4.2023 நாளிட்ட மனுவில் தான் ஏற்கெனவே தெரிவித்த புகாரினையே அளித்துள்ளார். மேலும், இம்மனு சம்மந்தமாக

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 6.6.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளனர்.

பேரூராட்சியால் ஏற்கனவே உறுதி அளித்துள்ளபடி Lock and seal, Deoccupation மற்றும் Demolition அறிவிப்புகளை மேலும் தாமதமின்றி வழங்கி நடவடிக்கை எடுக்க மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

The Director of Town Panchyats is directed to oversee whether the orders of the Forum are being complied with by the Town Panchyats of Batlagundu without delay, dilly dallying and dereliction by simply moving days without any substantial action that would give room for suspicion and distrust in the minds of the public.

2023–ஆம் ஆண்டு, ஜுன் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர், மதுரை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வத்தலக்குண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.அர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.